**SC : 68/2024**
Date : 23.02.2026

அ.சா.1 : பொன்ராஜ்

<u>அசா.1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>

நான் 3ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எழுத படிக்க தெரியுமா என்றால் கொஞ்சம் தெரியும். எனது வீடு கீழத்தெருவில் எத்திசையில் உள்ளது என்றால் எனது வீடு தெற்கு பார்க்க உள்ளது. வீட்டின் முன்பகுதியில் தகரத்தை வைத்து மேற்கு பார்க்க தலைவாசல் உள்ளது. எனது வீட்டின் பின்னால் இசக்கிமுத்து வீடு உள்ளது. அதற்கு பின்பக்கம் ஒரு வீடு உள்ளது. யார் வீடு என்று எனக்கு தெரியாது. எதிரி முருகன் வீடு வடக்கு திசையில் உள்ளது. எதிரி முருகன் வீட்டின் தென்பக்கம் கிழமேலாக நாடார் தெரு உள்ளது என்றால் சரிதான். நான் வெட்டுப்பட்டு கீழே விழுந்து சத்தம் போட்டதும் எனது மனைவி மற்றும் மதனி மகன் ஓடி வந்தார்கள் என்றால் சரிதான். நான் வெட்டுப்பட்டு கீழே விழுந்த இடத்தில் ரத்தம் கொஞ்சம் கொஞ்சம் சிந்தி இருந்தது. நான் போட்டு இருந்த சாரத்தில் எல்லாம் ரத்தம் பட்டு இருந்தது என்றால் சரிதான். ரத்தம் பட்ட சாரத்தை நான் போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றால் இல்லை. என் மனைவி மருத்துவமனையில் அலசி தூர போட்டுவிட்டார். நான் சொல்வது போல் சாரத்தில் எந்த ரத்தமும் படவில்லை என்றாலும் அதனால்தான் நான் சாரத்தை போலிசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. என்னை வெட்ட வருவதற்கு முன்பு எனக்கும் எதிரிக்கும் எதாவது வாய்த்தகராறு ஏற்பட்டதா என்றால் இல்லை. நான் எதிரி அருவாளுடன் வந்ததை பார்த்ததும் தப்பி ஓட பார்த்தேனா என்றால் இல்லை. அருவாள் வைத்திருந்தது தெரியாது. அருவாள் வைத்திருந்ததை நான் பார்க்கவில்லை என்ற விபரத்தை புகார் வாக்குமூலத்திலோ போலீஸ் விசாரணையிலோ சொன்னேனா என்றால் இல்லை. அருவாளால் வெட்டிய பிறகு அருவாளில் ரத்தகறை இருந்ததா என்றால் நான் பார்க்கவில்லை. அருவாளை எதிரிகொண்டு போய்விட்டார். எங்கள் ஊரில் வாடகை கார் இல்லை. வாடகை கார் மூலைக்கரைப்பட்டியில் சொல்லிதான் வந்தது. என்னிடம் பைக், போன் உண்டு என்றால் சரிதான். போன் மூலமாக போலிஸ் நிலையத்திற்கு சொன்னேனா என்றால் இல்லை. கார் 1/4 மணி நேரம் கழித்து வந்தது. பாளையங்கோட்டை ஐகிரவுண்டு மருத்துவமனைக்கு செல்லும் வழியில்தான் மூலைக்கரைப்பட்டி காவல் நிலையம் மற்றும் அரசு மருத்துவமனை இருக்கிறது என்ற விபரம் எனக்கு தெரியும். அன்றைய தினம் நான்

மூலைக்கரைப்பட்டி காவல் நிலையத்திற்கோ அல்லது அரசு மருத்துவமனைக்கோ செல்லவில்லை. நான் முதல் விசாரணையில் எனக்கு ஏற்பட்டதாக கூறிய காயங்களை ஐகிரவுண்டு மருத்துவமனையில் வைத்து மருத்துவர் பார்த்தார் என்றால் சரிதான். ஐகிரவுண்டு மருத்துவமனையில் டாக்டரிடம் 7.30 மணிக்கு என் வீட்டில் வைத்து காயங்கள் ஏற்பட்டதாக சொன்னேனா என்றால் சொன்னேன். சாட்சிகள் ரமேஷ், தவசிமுத்து ஆகியோர்கள் எனது பெரியப்பா பையன் என்றால் சரிதான். ஆனால் அவர்கள் பேசமாட்டார்கள். சாட்சிகள் ரமேஷ், தவசிமுத்து, கணபதிராமன் மற்றும் சக்திவேல் ஆகியோர்கள் பல வருடங்களாக எங்கள் ஊரில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். போலிசார் ஐகிரவுண்டு மருத்துவமனைக்கு 8.45 மணியிலிருந்து 9 மணிக்குள் வந்து விட்டார்கள். புகார் வாக்குமூலத்தை 1 போலிஸ் எழுதினார். அவர் எழுதுவதற்கு அதிகபட்சம் 10 நிமிடங்கள் ஆனது. புகார் வாக்குமூலத்தில் எதிரி முருகன்எனது மனைவியை அசிங்கமாக பேசியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். உண்மையில் எதிரி முருகன் எனது மனைவியை பற்றி அசிகங்கமாக பேசாததால்தான் நான் புகார் வாக்குமூலத்தில் அதுபற்றி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலத்தில் எனது மனைவி என்னை மேல்சிகிட்சைக்காக பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பாளையங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சேர்வதற்கு முன் எந்த மருத்துவமனையில் சிகிட்சை பெற்றேன் என்ற விபரத்தை புகார் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் நான் வேறு எங்கும் சிகிட்சை எடுக்கவில்லை. நான் வேறு எங்கோ தனியார் மருத்துவமனையில் சிகிட்சை எடுத்திருப்பதை மறைக்கிறேன் என்றால் சரியல்ல. மூலைக்கரைப்பட்டியில் தங்கராஜ் என்ற மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். எதிரியை எத்தனை மணிக்கு காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. ஆய்வாளர் என்னை என்றைக்கு விசாரித்தார்கள் என்றால் சம்வத்தன்று சாயந்திரம் 5 மணிக்கு ஒரு பெரிய போலீஸ் வந்தார். பெரிய போலீஸ் விசாரிக்கும் போது புகார் வாக்குமூலத்தில் எனது மனைவி அறிவேன் சாட்சி கையொப்பம் இட்டது பற்றி சொன்னேனா என்றால் சொன்னேன். எங்கள் ஊர் அம்மன் கோவில் பிரச்சினையில் நாங்கள் ஒரு தரப்பாகவும், எதிரி ஒரு தரப்பாகவும் 2 பிரிவுகளாக உள்ளோம் என்றால் சரிதான். என்னை ஐகிரவுண்டு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற வாகன ஓட்டுனரின் பெயர் தெரியாது. ஆனால் ஆளை தெரியும்.

அந்த ஓட்டுனரை சாட்சியாக விசாரித்தால் சம்பவத்தன்று எந்த இடத்தில் இருந்து என்னை ஐகிவுண்டு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார் என்ற விபரம் தெரிய வரும் என்றால் சரிதான். உண்மையில் நான் எந்த இடத்தில் காயம்பட்ட விபரம் தெரிந்து விடும் என்பதால்தான் அந்த ஓட்டுனர் இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு குடிபக்கம் உண்டு என்றால் இல்லை. ஆனால் நல்ல நாளான தீபாவளி, பொங்கல், கோவில் கொடை வந்தால் குடிப்பேன். எனது மனைவின் நடத்தை பற்றி அசிங்கமாக ஊரில் பேச்சு நடைபெற்றதற்கு எதிரிதான் காரணம் என்று நான் நினைத்தேன் என்றால் சரிதான். நான் கூறுவதுபோல் எதிரி என்னை தாக்கி எந்த காயமும் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் கூறுவதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. பைக்கிள் செல்லும் போது கீழே விழுந்ததில் எனக்கு ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரி என் மனைவியை பற்றி அசிங்கமாக பேசுவதற்கு காரணமாக இருந்ததால் அவர் மீது இந்த பொய் புகார் கொடுத்து பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிக்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல.

**SC : 68/2024**
Date : 23.02.2026

அ.சா.2 பொன்செல்வி

<u>அசா. 2 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>

அன்றைய தினம் எதிரி என்னை எத்ததனை அடி துரத்தில் ஓடினார் என்றால் 10 அடி துாரத்தில் பார்த்ததும் ஓடிவிட்டார். எதிரியின் அருவாளில் ரத்தக்கரை இருந்ததா என்றால் இருந்தது. ரத்தக்கரை இ ருந்த விபரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். போலீஸ் சம்பவம் நடந்த பிறகு எத்தனை மணிக்கு வந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்த அன்று சாயந்திரம் வந்தார். அப்போது போலிஸ் விசாரணையில் அறிவேன் சாட்சி கையெழுத்து போட்ட விபரத்தை சொன்னேன். வெள்ளை பேப்பரில் என்னிடமும் எனது கணவரிடமும் கையெழுத்து வாங்கிவிட்டு புகார் வாக்குமூலம் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டதால்தான் அறிவேன் சாட்சி விபத்தை ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது மகள் சம்பவத்தை பார்த்து ஓடி வந்த விபரத்தை புகாரிலோ அல்லது போலிஸ் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கூறியது போல் எதிரி எனது கணவரை தாக்கி எந்த காயமும் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் கூறுவதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், நான் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனது கணவர் பைக்கில் செல்லும்போது கீழே விழுந்ததில் ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரி மீது உள்ள முன் விரோதத்தின் காரணமாக பொய் புகார் கொடுத்தார் என்றும், எனது கணவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.